‘ஆளுநரே பல்கலைக் கழக வேந்தராக நீடிக்கலாம்’ என்ற கருத்து:

# பதவி சுகத்திற்காக காங்கிரஸ் தனது கொள்கையை மாற்றிக்கொள்வதா?

## உயர்கல்வித்துறை அமைச்சருக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி கண்டனம்!



**சென்னை, மே 28 -**

**“ஆளுநரே பல்கலைக் கழக வேந்தராக நீடிக்கலாம் என்று தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் கூறியிருப்பது கண்டனத்திற்குரியது” என்று கழக துணைப் பொதுச்செயலாளரும் முன்னாள் உயர்கல்வித் துறை அமைச்சருமான க.பொன்முடி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தராக முதலமைச்சரை நியமிக்கும் சட்ட முன்வடிவினை கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான கழக ஆட்சியில் காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், சி.பி.ஐ., சி.பி.எம்., அ.தி.மு.க., ம.தி.மு.க. உள்ளிட்ட பா.ஜ.க. அல்லாத அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, அச்சட்டம் ஆளுநர் வழியாக குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, அச்சட்டமுன் வடிவுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், புதியதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசின் உயர் கல்வித் துறை அமைச்சரும் – காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருமான விஸ்வநாதன் “ஆளுநரே பல்கலைக் கழக வேந்தராக நீடிக்கலாம்” என்று கருத்து தெரிவித்திருப்பது மிகவும் கண்டனத்திற்குரியதாகும். மேலும் இது மாநில உரிமைகளுக்கு எதிரானது ஆகும்.

**பா.ஜ.க.வின் அடிவருடியாக மாறிய காங்கிரஸ்!**

’ஒன்றிய பா.ஜ.க. அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநரே பல்கலைக் கழக வேந்தராக தொடரலாம்‘ என்று பா.ஜ.க.வுக்கு ஒத்து ஊதும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் விஸ்வநாதனின் கருத்து பா.ஜ.க. அரசின் அடிவருடியாக காங்கிரஸ் மாறிவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இச்சட்டம் நிறைவேறுவதற்கு ஆதரவு தெரிவித்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரே இன்றைக்கு அதற்கு எதிராக பேசுவது என்பது பதவி சுகத்துக்காக காங்கிரஸ் கட்சி தனது கொள்கையை மாற்றிக் கொண்டதாகத் தெரிகிறது. இதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கடுமையாக கண்டிக்கிறேன்.

இவ்வாறு முன்னாள் உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம், பொழிச்சலூரைச் சேர்ந்த புரட்சிபாரதம் கட்சியில் இருந்து பொழிச்சலூர் ஆசிம் தலைமையில் 50 பேர் கூண்டோடு விலகி மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அருகில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, தொ.மு.ச. செயலாளர் இரா.பொன்னுராம், ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், ஒன்றிய துணைச் செயலாளர் செல்வராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் வனஜா தயாளன், துணைத் தலைவர் ஜோசப், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் அன்பு பிரபாகரன் உள்ளிட்டோர் உள்ளனர்.

# மே 29 வரை நாடு முழுவதும் வெப்ப அலை நீடிக்கும்!

*புதுடெல்லி, மே 28 -*

நாடு முழுவதும் மே 29 வரை வெப்ப அலை நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது. கோடை வெளியில் காரணமாக நாடு முழுவதுமே குறிப்பாக வடமாநிலங்களில் வெப்ப அலை மிகவும் கடுமையாக இருப்பதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.

இதுவரை இல்லாத வகையில் வடமாநிலங்களில் வெப்ப அலை மிகவும் மோசமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெப்ப அலை காரணமாக தெலுங்கானாவில் கடந்த 2 நாட்களில் மட்டும் சுமார் 51 பேர் வரை உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதனிடையே கோடை வெப்பத்தின் தொடர்ச்சியாக மேலும் சில நாட்களுக்கு வெப்பத்தின் தாக்கம் நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது.

# அரசு குடியிருப்பு வழங்குவதில் சாதியப் பாகுபாடு காட்டுவதா?

## முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் த.வெ.க. அரசுக்குக் கண்டனம்!



**சென்னை, மே 28-**

**அரசு அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளை பொதுமக்களுக்கு வழங்குவதில் த.வெ.க. அரசு சாதியப் பாகுபாடு காட்டுவதை கண்டித்து முன்னாள் அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளருமான மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-**

பன்னெடுங்காலமாய் சென்னையின் பல்வேறு பகுதிகளில் ஒழுகும் ஓலை குடிசைகளில் மக்கள் வசித்து வந்த நிலையை மாற்றிட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசு 1970 ஆம் ஆண்டு “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!” என்கிற முழக்கத்துடன் ‘தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்’ என்கிற அமைப்பினை உருவாக்கியது.

அதன் மூலம் சென்னையில் அடர்த்தியான குடிசைகள் நிரம்பிய பகுதிகளில் வசித்த மக்களுக்கு மாற்றிடம் ஒதுக்கிவிட்டு அங்கே அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டித் தந்து, அவர்களை அந்த அடுக்குமாடிக்குடியிருப்புகளில் அமர்த்தி அழகு பார்த்தது.

இந்தத் திட்டம் சென்னையில் பல்வேறு இடங்களில் செயல்பட்டு வந்தது. இதில் கட்டி முடிக்கப்பட்டு ஏறத்தாழ 30 அல்லது 35 ஆண்டுகள் பழமையான கட்டிடங்களை அகற்றிவிட்டு மீண்டும் அதே பகுதியில் புதிய குடியிருப்புகளை ஏற்கனவே இருந்ததைவிட அதிக வசதியுடன் நவீனமான முறையில் கட்டித் தருவதற்கு நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டார்.

அந்த ஆணையின் பெயரில் சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் கோட்டூர்புரம், வாழைத்தோப்பு, சுப்புப் பிள்ளை தோட்டம், அப்பாவு நகர் ஆகிய பகுதிகளில் பல நூறு கோடி ரூபாய் செலவில் ஏறத்தாழ 2700 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு தேர்தல் அறிவிப்புக்கு முன்னர் கடந்த மார்ச் மாதம் 2ஆம் நாள் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிலையில் தமிழக சட்டமன்றத்திற்கு தேர்தல் அறிவிக்கப்பட்டக் காரணத்தால் கட்டிமுடிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப் பட்ட வீடுகள் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்குகிற பணி தடைபட்டுப் போயிற்று. இதற்கிடையில் புதிய ஆட்சி வந்த சூழலில் கட்டி முடிக்கப் பட்ட வீடுகள் குடியிருப்புதாரர்களுக்கு வழங்குகிற பணி குடிசை மாற்று வாரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது.

குடியிருப்புதாரர்களுக்கு வீடு வழங்கப்படுகிற நேரத்தில் மாற்றுத் திறனாளிகள் வயது மூத்தவர்கள் மற்றும் கடும் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தவிர்த்த மற்றவர்கள் அனைவருக்கும் பொதுக்குலுக்கல் முறையில் வீடுகள் தேர்வு செய்து தரப்படும் என்று நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் உறுதி அளித்திருந்தோம்.

தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் “தலித் மக்கள் குடி யிருக்கும் குடியிருப்புகளில் எங்களுக்கு வீடு வேண்டாம். எங்களுக்கென்று ஒரு பிளாக்கை தனியாக ஒதுக்கீடு செய்து தர வேண்டும்!” என்று ஒரு சமூகத்தினர் கேட்டு வந்தனர். அதற்கு த.வெ.க சட்டமன்ற உறுப்பினர் ஆதரவாக இருக்கிற காரணத்தினால் குடிசை மாற்று வாரிய அதிகாரிகளும் இந்தச் செயலுக்கு துணை போவதாகத் தெரிகிறது.

சாதிப் பாகுபாடு கூடாது என்று சமத்துவபுரங்களை கட்டித் தந்த கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட குடிசை மாற்று வாரிய குடியிருப்பு ஒதுக்கீட்டில் சாதிப் பாகுபாடு காட்டுவது என்பது மிகப்பெரிய குற்றமாகும். இது உடனடியாக தடுக்கப்பட்டாக வேண்டும். அனைவருக்கும் பொதுவான நிலையில் குலுக்கல் நடைபெற்று சுமூகமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் இத்தகைய போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் அடுத்த மணவாளநகரில்

# 2 நாட்களாக நீடித்து வரும் மின்தடையால் பொதுமக்கள் அவதி!

## 300–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாலை மறியல்!



*திருவள்ளூர், மே 28:*

திருவள்ளூர் அடுத்த மணவாளநகர் அருகே உள்ள ஜல்லி மேடு பகுதி மற்றும் கன்னியம்மன் கோவில் தெரு உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 2 நாட்களாக நீடித்து வரும் மின் தடையை கண்டித்து, என்டிபி திருமண மண்டபம் எதிரே சாலையில் அமர்ந்து 300-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் பெண்கள், முதியோர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர். “உடனே மின்சாரம் வழங்க வேண்டும்”, “மக்களை அலட்சியம் செய்யாதீர்கள்” என தொடர்ந்து கோஷங்கள் எழுப்பியதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. மேலும், மின்சாரம் இல்லாததால் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் வேதனை தெரிவித்தனர்.

“குழந்தைகளுக்கு குடிக்க கூட தண்ணீர் இல்லை. இரவு முழுவதும் இருளில் தவிக்கிறோம். முதியோர்கள், கர்ப்பிணி பெண்கள் கடும் சிரமத்தில் உள்ளனர்” என பெண்கள் கண்ணீருடன் தெரிவித்தனர். மேலும், “மின்சாரம் வழங்கும் வரை இந்த போராட்டத்தை கைவிடமாட்டோம். பகலும் இரவும் தொடர்ந்து போராட தயாராக இருக்கிறோம்” என்று பொதுமக்கள் தெரிவித்ததால் அங்கு பரபரப்பாக காணப்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மணவாளநகர் போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்த போராட்டம் காரணமாக அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. உடனடியாக மின்வாரிய அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததையடுத்து பொது மக்கள் கலைந்து சென்றனர்.

# முஸ்லிம் லீக், வி.சி.க. தலைவர்கள் நன்றி கெட்டவர்கள்!

## தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு கடும் கண்டனம்!

**சென்னை, மே 28 -**

**முஸ்லிம் லீக், வி.சி.க. தலைவர்கள் நன்றி கெட்டவர்கள் என்று தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு பி.ஜைனுல் ஆபிதீன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு பி.ஜைனுல் ஆபிதீன் கூறியிருப்பதாவது : –

தேர்தலுக்குப் பிறகு சில கட்சிகள் எடுத்திருக்கிற நிலைப்பாடு நியாயமற்றதாக உள்ளது. வெளியில் இருந்து ஆதரவு என திருமாவளவன் ஆரம்பத்தில் சொன்னார். பிறகு அமைச்சரவையில் இடம்பெற்று, ஆளுங்கட்சி ஆயிட்டார்.

ஆதவ் அர்ஜூனாவை முன்பு கட்சியில் சேர்த்ததற்குப் பிறகு உள்ள திருமாவளவன் வேற. தடம் மாறிட்டாரு, விலை போயிட்டாரு. த.வெ.க. ஆர்எஸ்.எஸ். பெற்ற பிள்ளை என முன்னர் சொன்னார். பின்பு ஆர்எஸ்.எஸ். பிள்ளைகள்தான் என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து கிடையாது. கவர்னர் ஆட்சி வரக்கூடாது என்பதற்குத்தான் ஆதரிக்கிறேன் என்று சொன்னார். ஆனால், ஆட்சியில் இப்ப சேர்ந்துட்டார். இப்ப அதை சொல்ல முடியாது.

அடுத்து ஐ.யு.எம்.எல். ஆரம்பத்தில் ஆதவ் அர்ஜூனா ஆதரவு கேட்கும் போது, நாங்க ஆதரிக்க மாட்டோம்னு தெளிவா சொன்னாங்க. அதுக்குப் பிறகு, ‘வெளியில் இருந்து ஆதரவு கொடுக்கலாம்’ என்ற நிலைப்பாட்டிற்கு வந்து மு.க.ஸ்டாலின் அவர்கள் கிட்ட கேட்கிறாங்க. அப்படி கேட்டால் என்ன செய்வாங்க, யாருமே ‘போகாதே’ என்று சொல்ல மாட்டாங்க. ‘ஆதரிச்சுக் கிருங்க’னு சொல்லிட்டாரு.

**தி.மு.க.வுக்கு நன்றியுள்ள சமுதாயம் முஸ்லிம் சமுதாயம் !**

ஐ.யு.எம்.எல்க்கு ஓட்டு போட்டவர்களும், விடுதலைச் சிறுத்தைகளுக்கு போட்டவர்களும் விஜய் வேணாம் என்றுதானே ஓட்டு போட்டாங்க. மு.க.ஸ்டாலின் முதல்வரா வரணும் என்றுதானே ஓட்டு போட்டாங்க. அந்த மக்களுக்கு துரோகம் செய்ற வகையில வி.சி.க., ஐ.யு.எம்.எல் முடிவு எடுக்குறாங்க. ரெண்டு தலைவர்களும் நன்றி கெட்டவர்களாக இருக்கிறார்கள். தி.மு.க.வை பொறுத்தவரைக்கும் அவங்க செஞ்ச உதவிக்கு வந்து நன்றியுள்ள சமுதாயமாக முஸ்லிம் சமுதாயம் இருக்கிறது.

முஸ்லிம் தலைவர்கள் எப்படா வாய்ப்பு கிடைக்கும், போகலாம் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அற்ப பதவிக்காக வேண்டி சந்தர்ப்பவாத அரசியல் பண்றாங்க. சுயநலத்துக்கு செய்யக்கூடிய முடிவுகளுக்கெல்லாம் ஒரு நல்ல நோக்கம் கற்பிக்கப் பார்க்கிறாங்க. கண்டிப்பா இது கேவலமான செயல்.

இவ்வாறு அவர் கூறினார்.



குன்னம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் குன்னம் தொகுதி மக்களிடம் நன்றி தெரிவித்தார். உடன் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஒன்றிய கழக பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் அய்யப்பன், ஒன்றிய பொறுப்பாளர் சி.இராஜேந்திரன் தே.மு.தி.க. ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.